# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2009
ஆவணி 28
ஷவ்வால் பிறை 9
புதன் (13-9-1978)
திருவியது 1947
புத்தகம் 32
இதழ் 30

விலை சதம் 35


# அடிமைச் சட்டம் பொடிபட

# ஆர்த்தெழுந்தது தமிழீழம்!

## கறுப்புக்கொடி கடையடைப்பு, பாடசாலைகள் பகிஷ்கரிப்பு, புதிய அரசியலமைப்பு தீக்கிரை, உதயசூரியன் கொடி உயர்ந்தது!

தமிழீழ மக்களின் ஜனநாயகத் தீர்ப்புக்கு விரோதமாகவும், சட்ட விரோதமாகவும், தமிழ் ஈழ மக்களின் சம்மதமின்றியும், தமிழீழநாட்டை சிங்கள ஸ்ரீலங்காவின் ஆள்புலமாகப் பிரகடனப்படுத்தும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் புதிய பாஸிஸ ஒற்றையாட்சி ஏகாதிபத்திய அரசியலமைப்பை நிராகரித்து அச்சட்டம் நடைமுறைக்கு வந்த செப்டெம்பர் 7ம் நாள் தமிழீழமெங்கும் பரந்த அடிப்படையிலான எதிர்ப்பு இயக்கம் விறுவிறுப்புடனும் வெற்றிகரமாகவும் நடைபெற்றது.

பாடசாலை தமிழ் மாணவ மாணவியர் அனைவரும் நூறு வீதம் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்; ஆங்காங்கே பல இடங்களில் கறுப்புக் கொடிகள் பறக்கவிடப்பட்டன; தொகுதிகள் தோறும் தமிழீழத்தேசியக் கொடியான உதயசூரியன் கொடி, தமிழீழ தேசிய கீதத்துடன் ஏற்றி வைக்கப்பட்டன; மட்டக்களப்பில் முன்னெப்போதுமில்லாதவாறு கடைகள் யாவும்மூடப்பட்டுபரிபூரண ஹர்தால் விறுவிறுப்புடன் இடம்பெற்றது; மட்டக்களப்பிலும், திருகோணமலையிலும் காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா, பொன்வேலுதாஸ் உட்பட 15 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்; யாழ் வளாகத்தில் மாணவர்கள் புதிய அரசியலமைப்புச் சட்டப்பிரதிக்கு தீமூட்டி எரித்தனர்.

செப்டெம்பர் —7 எதிர்ப்பியக்கம் பூரண வெற்றியடைந்ததுடன், தமிழ் மக்களின் விடுதலை உணர்ச்சி பொங்கி வழிந்து கொண்டிருப்பதை உலகுக்கு எடுத்துக்காட்டியது.

செப்டம்பர் 7ம் நாள் சிங்கள சிறீலங்காவில் புதிய அரசியலமைப்பு கொண்டாடங்கள் நடைபெற்ற அதே வேளையில் தமிழ்ஈழத்தில் இக்கொண்டாடங்கள் முற்றாக பகிஷ்கரிக்கப்பட்டன. அன்றைய பாராளுமன்றக் கூட்டத்தைப் பகிஷ்கரித்து, கூட்டணி பா.உ.க்கள், ஒவ்வொரு தொகுதியிலும், நடைபெற்ற எதிர்ப்பு இயக்

—4-ம் பக்கம் பார்க்க

## ஜே. ஆர். ஆட்சிக்கு சகுனப்பிழை

புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வந்தநேரம் ஆட்சியாளருக்கு சகுனம் சரியில்லைப் போலும்! புதிய அரசியலமைப்பு கொண்டாட்டங்கள் நடந்து முடிந்த மறுநாள் 9.9.78 அன்று ஐக்கிய தேசியக் கட்சியின் தூணாக விளங்கிவரும் தபால் அமைச்சருமான திரு. ஷெல்டன் ஜெயசிங்கா மாரடைப்பினால் காலமாகியுள்ளார்.

## மன்னிக்க வேண்டுகிறோம்

10-9-78 சுதந்திரன் வார இதழ் எமது கட்டுப்பாட்டுக்கு மிஞ்சிய நிலையில் ஏற்பட்ட மின்சாரக் கோளாறு காரணமாக தாமதமாகியே வெளிவந்துள்ளதென்பதையும் அதற்காக விற்பனையாளர்களும் வாசகர்களும் பொறுத்தருளும்படியும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

## யாழ் வளாக தமிழ் மாணவர்கள் நடத்திய எதிர்ப்பியக்கம்

இறைமையும் தன்னுரிக்கும் உள்ள தமிழ் ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமையை எவ்வகையிலும் அங்கீகரிக்காததும், அவர்கள் மீது வலோற்காரமாகத் திணிக்கப்பட்டதுமான, சிறீலங்கா நாட்டின் புதிய அரசமைப்பானது தமிழ்ஈழவரை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாதது என்பதைப் பிரகடனப் படுத்தும் முகமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாக மாணவ மாணவிகள் கடந்த வியாழனன்று (7-9-78) வளாகத்தின் திருநெல்வேலி வளாவில் கூடி மேற்படி அரசமைப்பின் சட்டமூலப் பிரதியொன்றினை எரித்தனர். விரிவுரைகளைப் பகிஷ்கரித்து கண்டனக் கூட்டம் நடாத்தினர்.

தேசிய உடையுடன் கறுப்பு இலச்சினையும் அணிந்து வந்திருந்த மாணவர் கூட்டத்தொடக்கத்தில் பின்வருமாறு உறுதியுரை செய்தனர்:

"தமிழ் ஈழ மக்களாகிய நாங்கள்,—

(1) இன்று முதல் அமுல் செய்யப்படும் சிறீலங்காவின் புதிய அரசமைப்பானது, தமிழ் ஈழத்தையும் தமிழ் ஈழ மக்களையும் முறையே தங்கள் ஆள்புலமாகவும் ஆளப்படும்பிரஜைகளாகவும் குறிப்பிட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளதால் அதை வன்மையாக எதிர்க்கிறோம் என்றும்—

(2) சிறீலங்காப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் எந்த அரசமைப்பையும் தமிழ் ஈழமக்கள் நிராகரித்து வந்தது போலவே இதனையும் நிராகரிப்பதோடு இதன் விதிகள் எம்மை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றும் தமிழ் ஈழமக்களின் மீது ஆணையிட்டு உறுதிபூணுகின்றோம்—

தமிழ் ஈழ மக்களின் அடிமை இருளை வெளிக்காட்டும் முகமாக மாணவர்கள் வளாக முன்றலில் கறுப்புக் கொடி ஏற்றி வைத்தனர். கூட்ட நிகழ்ச்சிகளை வெளியில் நின்று அவதானித்த காவல் துறையினர் புகைப்படங்களும் எடுத்தனர். விடுதலைக்கீதம் இசைத்ததுடன் கூட்டம் மாணவர் தமது விடுதலை வேட்கையை வெளிக்காட்டினர்.

## அவ்ரோ விமானம் தீப்பிடித்து சாம்பலானது!

### அரசுக்கு நட்டம் மூன்றரை கோடி!

புதிய அரசியலமைப்பு அமுலுக்கு வந்த செப்டெம்பர் 7ம் திகதி காலை இலங்கை அரசிடமிருந்த ஒரேயொரு விமானமான 'அவ்ரோ' விமானம் இரத்மலானை விமான நிலையத்தில் மாலைதீவு செல்வதற்காக நிறுத்திவைக்கப்பட்டிருந்த போது குண்டுவெடித்து தீப்பற்றியெரிந்து முழுமையாகச் சேதமடைந்தது. இதனால் அரசுக்கு மூன்றரைக் கோடி ரூபா நட்டமேற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இரத்மலானையிலிருந்து 7.9.78 காலை யாழ் பலாலி நிலையத்துக்கு வந்த இந்த விமானம் பின்னர் பலாலியிலிருந்து இரத்மலானைக்கு திரும்பிச் சென்றது. விமானத்தில் பயணம் செய்தவர்கள் அனைவரும் விமான ஓட்டி உட்பட விமானத்திலிருந்து இறங்கிச்சென்ற பின்னரே இந்த எதிர்பாராத சம்பவம் இடம்பெற்றதாம். இவ்வாறான நிகழ்ச்சி இலங்கையின் சரித்திரத்திலேயே இப்போது தான் முதல்தடவையாக இடம் பெற்றுள்ளது.

இலங்கை அரசிடமிருந்த ஒரேயொரு விமானம் இதுமட்டுமேயென்பது குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ஈழ விடுதலை வேழம் அமரர் அரியநாயகம்!

## அறப்போரணித் தலைவரின் தியாகவாழ்வு தமிழ் இளைஞனுக்கு எழுச்சி தரட்டும்

இன்றைய இளைஞர்களின் அரசியல் தீவிரவாதத்தை நினைக்கும்போது அமரர் அரியநாயகம் இன்றில்லையே எனஏங்குகிறேன். இவர் தமிழரசுக் கட்சியில் ஒரு தீவிரவாதி என்பதற்கு 1956ல் (த. அ. கட்சியின்) திருமலை மகாநாட்டில் 'தமிழர்கள் எல்லோரும் சுடப்பழக வேண்டும்—சோல்பரி அரசியல் திட்டத்தை நோக்கி', என நாசூக்காகப் பேசியதும், இவருடன் அடிக்கடி சந்தித்து கதைக்கும் போதெல்லாம் உலக நாடுகளில் நடைபெறும் விமானக் கடத்தல்கள், கெரில்லாக்களின் தாக்குதல்கள் போன்றவற்றைப் பத்திரிகைகளில் வாசித்துக் காண்பித்து இப்படியான நிகழ்ச்சிகளுக்கும் எம்மினம் தன்னை ஆயத்தமாக்கிக் கொள்ள வேண்டும் என்றும் கூறுவார்.

தமிழரசுக் கட்சியின் சிறப்பு மகாநாடு 1972ம் வருடம் நடைபெற்றபோது எங்கள் கிளையின் சார்பில் ஒரு பிரேரணையை முன்மொழிந்து பேசிய போது ''கூட்டாட்சி நிறுவும் இலட்சியம் கிழக்கு மாகாணத்தைப் பொறுத்தமட்டில் எந்த அளவு சாத்தியமாகும் என்பதைப் புனராலோசனை செய்ய வேண்டிய கட்டம் உருவாகியுள்ளது. கூட்டாட்சிக் கோரிக்கை விடுக்கப்பட்டபோது பெரும்பான்மையினராய் தமிழர்களிருந்தார்கள். இன்று கிழக்கில் தமிழர்கள் பெரும்பான்மையில்லை. சுதந்திரம் கிடைத்த பின் ஒன்றலஷ இலட்சத்துக்கு மேற்பட்ட சிங்களவர்கள் கிழக்கு மாகாணத்தில் குடியேற்றப்பட்டுள்ளார்கள். திருமலை மாவட்டத்தில் தமிழர்களின் பெரும்பான்மை வேகமாகச்சரிந்து வருகிறது அம்பாறை மாவட்டத்தில் தமிழர்கள்மூன்றுவது இடத்துக்குத்தள்ளப்பட்டு விட்டார்கள். மட்டக்களப்பு மாவட்டம் ஒன்றிலேயேதமிழர்கள் இன்னும் பெரும்பான்மையினராய் இருக்க முடிகிறது.

''மாகாணத்திலுள்ள மூன்று மாவட்டங்களில் நாம் இரண்டு மாவட்டங்களில் பெரும்பான்மையை இழந்து விட்டபின், நீண்டகால இலக்கில் சமஷ்டிக் கோரிக்கையைத் தமிழரசுக் கட்சி இன்னும் வற்புறுத்தி வருவது பொருந்துமா? மாகாணம் முழுவதும் தமிழர்களல்லாதவர்களின்எண்ணிக்கை — பெரும்பான்மையை அடைந்து விட்டபின் இதுஎத்தனை தூரம் சாத்தியமாகும், இதன் பிராயச்சித்தம் என்ன? சமஷ்டியை நோக்கி நீண்டகால கிளர்ச்சியில் தமிழரசுக்கட்சி ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போக்கை மாற்றி ஈழத்தில் தமிழர்களின் சுயநிர்ணய உரிமையைநிலைநாட்டுவதற்குரிய மாற்று வழிகளைக் கையாளுவதற்கு ஏற்ற அரசியல்முடிவொன்றைக்காண இலங்கைத் தமிழரசுக்கட்சி முயல வேண்டும்'' என்று கூறினர்.

இக்கூற்றுக்களிலிருந்து தமிழரசுக் கட்சி தனது சமஷ்டிக் கொள்கையிலிருந்து முன்னேறி இன்று நாம் கோரும் தமிழ்ஈழம் என்னும் முடிவுக்கு வந்திருப்பதில் அமரர் அரியநாயகம் அவர்களின் பங்கும் பெருமளவுண்டு எனலாம் நான் அறிந்த பல விடயங்களிலிருந்து அமரர் அரியநாயகம் அவர்கள் இன்றிருந்தால் பொத்துவில் தொகுதியில் கனகர் போன்றவர்கள் கனவுகூடக்கண்டிருக்க முடியாது. ஒருவேளை ஆட்சியாளர் 'தமிழ்ஈழ விடுதலைப் புலி' என நாமம் சூட்டியிருக்கவும் கூடும்.

பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளும் போதெல்லாம் அரசியல் கலக்காது பேசமாட்டார். கோயில் திருவிழாக்கள், விளையாட்டுப்போட்டிகள், கலைவிழாக்கள் ஆகியநிகழ்ச்சிகளிலெல்லாம் அரசியல் பேசுகிறீர்களே எனக்கேட்டால், தம்பி தமிழரைப் பொறுத்தவரை மதமானாலும் சரி,விளையாட்டானாலும் சரி, கலையானாலும் சரி, மொழியானாலும் சரி, மிளகாய் முதல் வெண்காயம் வரை, எதை எடுத்துக்கொண்டாலும்அரசியல் தான் கலந்துள்ளது. எனவே எப்படிஅதைப்பற்றிப்பேசாதிருக்கலாம் என்பார். அது மட்டுமல்ல தனது மனதில் சரியெனப்பட்டதை உறுதி செய்வதற்காக எந்த விதத்திலும் வாதாடத்தயங்கமாட்டார்.

இப்படியாக அரசியலிலும் பொதுவாழ்விலும் நேர்மையும் திறமையுமுள்ள ஓர் தலைவனை இழந்து ஐந்து ஆண்டுகள் பூர்த்தியாகின்ற நேரத்தில் அவரை நினைவு கொள்ளும் போதெல்லாம் இப்படிப்பட்ட தலைவர்களை ஏன் எங்களிடமிருந்து பறித்தாய் இறைவா என ஏங்கும் அதே வேளையில் அமரர் அரியநாயகம் அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொடர உறுதி பூணுவோமாக, அதேவேளையில் அரியநாயகம் அவர்கள் இன்று இருந்திருந்திருந்தால்... என்றும் ஏங்குகிறேன்.

சி. வை. அரசரெத்தினம்
தம்பிலுவில்.

# தமிழா உன்னைத்தான்



''தம்பி, தமிழ், தமிழ், தமிழ் என்று எப்போதும் தமிழை வளர்ப்பதையேகடமையாகக் கொள்க! ஆனால் புதிய புதிய செய்தி, புதிய புதிய யோசனை, புதிய புதிய உண்மை, புதிய புதிய இன பம். — தமிழில் ஏறிக் கொண்டேபோகவேண்டும்.

''தம்பி — நான் ஏது செய்வேனடா, தமிழை விட மற்றொரு பாஷை சுகமாக இருப்பதைப் பார்க்கும்போது எனக்கு வருத்தமுண்டாகிறது. தமிழனை விட மற்றொரு ஜாதியான் அறிவிலும் வலிமையிலும்உயர்ந்திருப்பது எனக்குச் சம்மதமில்லை; தமிழச்சியைக் காட்டிலும்மற்றொரு ஜாதிக்காரி அழகாயிருப்பதைக் கண்டால், என்மனம் புண்படுகிறது.

''தம்பி, தமிழ் நாடு வாழ்க என்றெழுது; தமிழ் நாட்டில் நோய்கள் தீர்க என்றெழுது; தமிழ் நாட்டில் வீதி தோறும் தமிழ்ப்பள்ளிக் கூடங்கள் மலிக என்றெழுது!

''தமிழ் நாட்டிலே ஒரே ஜாதிதான் உண்டு; அதன் பெயர் தமிழ் ஜாதி! ஜாதி வேற்றுமைகளை வளர்க்காதே! ''ஜாதியிரண்டொழிய வேறில்லை என்ற பழந்தமிழ் வாக்கியத்தை வேதமாகக்கொள்!

''தமிழா! தெய்வத்தை நம்பு! பயப்படாதே உனக்கு நல்ல காலம் வருகிறது!

''தமிழா! உனது வேலைகள் அனைத்திலுமே பொய்க் கதைகள் மிஞ்சி விட்டன. உனது மதக்கொள்கைகள், லௌகிக கொள்கைகள், வைதிகநடை, எல்லாவற்றிலுமே பொய்கள் புகுந்து தலைதூக்கி ஆட இடம் கொடுத்து விட்டாய்! இவற்றை நீக்கி விடு!

''வீட்டிலும், வெளியிலும் தனிமையிலும், கூட்டத்திலும் எதிலும் எப்போதும் நேர்மையாயிருக்க வேண்டும்! உண்மை இருக்க வேண்டும். நீயும் பிறரை வஞ்சிக்கலாகாது. பிறரும் உன்னை வஞ்சிக்கலாகாது.

''தமிழா எல்லாச் செய்திகளிலும் உண்மை நிலவும்படி செய்! புராணங்களை வேதங்களாக நினைத்து மடமைகள் பேசி விலங்குகள் போல் நடந்து கொள்ளாதே!'

''இந்த நிமிஷம் தமிழ் ஜாதியின் அறிவு, கீர்த்தி வெளியுலகில் பரவாமல் இருப்பதை நான் அறிவேன். போன நிமிஷம் போய்த்தொலைந்தது. இந்த நிமிஷம் சத்யமில்லை; நாளைவரப்போவது சத்தியம். மிகவும் விரைவிலே தமிழின் ஒளி உலகம் முழுவதிலும் பரவாவிட்டால் என் பெயரை மாற்றியழையுங்கள்!

—மகாகவி சுப்பிரமணிய பாரதி
(பாரதி கட்டுரைகள்)

● செப்டம்பர் 11 பாரதி நினைவுதினத்தையொட்டி பாரதியின் சிந்தனைகள் மேலே இடம்பெற்றுள்ளன.

# லண்டனில் 5வது உலகதமிழ்மாநாடு

## அமைப்புப் பொறுப்பு பேராசிரியர் மார் அவர்களிடம்

ஐந்தாவது உலகத்தமிழ் ஆராய்ச்சிமாநாடு லண்டனில் 1979 யூலை—ஆகஸ்டில் நடைபெறவுள்ளது. இந்தமுடிவு அனைத்துலக தமிழாராய்ச்சி மன்ற இலங்கைக்கிளையின் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

23 8-78 யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற மேற்படி கிளையின் ஆட்சிக்குழுவில் லண்டனிலேயே அடுத்தமாநாட்டை நடத்துவதென்ற முடிவு மேற்கொள்ளப்பட்டது. இக்கூட்டத்தில், வணபிதா. தனிநாயக அடிகளார், பேராசிரியர் சு. வித்தியானந்தன், அறிஞர் ஜேம்ஸ்இரத்தினம், டாக்டர் இந்திரபாலா, கட்டடக் கலைஞர்வி.எஸ். துரைராசா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இந்தமாநாட்டின் அமைப்பாளராக லண்டன்பல்கலைக்கழகப் பேராசிரியான டாக்டர்மார் அவர்கள் கடமையாற்ற விருக்கிருர். அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ரஷியா, சீனு, யப்பான், இந்தியா ஆகியநாடுகளைச் சேர்ந்த அறிஞர்கள், தமிழ் இலக்கியம், கலாச்சாரம் மற்றும் அதுபோன்ற விஷயங்களையொட்டி மாநாட்டில் ஆராய்ச்சிக்கட்டுரைகள் சமர்ப்பிக்குமாறு அழைக்கப்படுவார்கள்.

அனைத்துலக தமிழாராய்ச்சிக்கழகத்தின் முதலாவது மாநாடு பாரிசிலும், இரண்டாவதுமாநாடு மலேசியாவிலும், மூன்றுவதுமாநாடு சென்னையிலும், நான்காவது மாநாடு யாழ்ப்பாணத்திலும் நடைபெற்றது தெரிந்ததே. ஐந்தாவதுமாநாட்டை செனகல் நாட்டில் நடத்துமாறு அந்த நாட்டின் பிரதமர் ஏற்கனவே அழைப்பு விடுத்திருந்த போதிலும், ஆய்வாளர்களுக்கு அங்குசெல்வதில் உள்ள பிரயாணக்கஷ்டம்காரணமாக, மாநாட்டை இங்கிலாந்தில் நடத்துவதென்றும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

லண்டன்ஆக்ஸ்போர்ட்பல்கலைக்கழகத்திலா அல்லது கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்திலா மாநாட்டை நடத்துவதென்பது இன்னும் முடிவு செய்யப்படவில்லை.

இம்மாதிரி உலகம்தழுவிய முறையில் தமிழ் மாநாடுகள் நடத்தும்யோசனையைஆரம்பத்தில் வெளியிட்டு, அவை நடப்பதற்கு, கால்கோளிட்டவர்கள் வண. சுவாமி தனிநாயக அடிகளாரும், பாரிசைச்சேர்ந்த பேராசிரியர் தமிழ் அறிஞர் பிலியோசாவுமே என்பது இங்கு சுட்டிக் காட்டத்தக்கது.

# ஜே. ஆரின் தார்மீக ஆட்சியில்

## ஒரு அப்பாவித் தமிழிளைஞனின் அனுபவம்

27.7.78 மன்னாரிலிருந்து யாழ்ப்பாணம் வரும் வழியில் வவுனியா பஸ் நிலையத்தில் பஸ்சுக்காக காத்திருக்கையில் என்னை சி. ஐ. டி. பொலிசார் என்று கூறிய இருவர் அழைத்துச்சென்றனர். வவுனியா பஸ் நிலையத்திற்குப் பின்னால் உள்ள வீடொன்றில் என்னைத் தடுத்து வைத்து விசாரணை செய்தனர். இவ்விசாரணையின் போது நீதான் உமா மகேஸ்வரன், காண்டீபன் எனக் கேட்டு அடித்துத் துன்புறுத்தினர். இத்தாக்குதலின் போது மண் நிரப்பப்பட்ட எஸ்லோன் பைப்பும் பயன்படுத்தப்பட்டது. பத்துப்பேர் இத்தாக்குதலில் பங்குபற்றினர்கள்; நான் தொடர்ந்து அவ்வீட்டில் இருக்க மறுத்ததினால்என்னை அன்று இரவு வவுனியா பொலிசாரிடம் ஒப்படைத்தனர். மறுநாள் மதியம் சட்டத்தரணி றெஜினோல்ட் மூலம் விடுதலை செய்யப்பட்டேன்.

—இ. புலேந்திரன் மாதகல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தமிழ்மக்களின் ஏகோபித்த ஆணையை ஏற்று தமிழ்ஈழத்தின் இறைமையை அங்கீகரியுங்கள்"

## 'சிறீலங்கா' அரசுக்கு அஞ்சல் எழுதுவினைஞர் சங்கம் கோரிக்கை!

"இத்தீவின் தமிழ் மக்களுக்கு மொழிப்பிரச்சினை மட்டும்தான் இருக்கின்றதென தற்போதையஅரசாங்கம் பிரச்சாரம் செய்த பின்பு அவர்களை நிரந்தர அடிமைகளாக்கும் முகமாக மொழிக்கு சிறிதளவு உரிமையை வழங்கி ஆனால் அடிப்படைப் பிரச்சினைகள் எதற்கும் தீர்வு காணுவதினின்றும்விலகிநிற்பதை வன்மையாகக்கண்டிக்கும் அதே வேளை தமிழ் மக்களின் முக்கிய பிரச்சனைகளாகிய;

பாரம்பரிய தமிழ் பிரதேசங்களில் அரசாங்க உதவியுடனான திட்டமிட்ட குடியேற்றம்,

பல்கலைக்கழகம் வரை தாய் மொழியால் மட்டும் கல்வி,

திறமை அடிப்படையில் மட்டும் பல்கலைக்கழகத்திற்கும், அரச சேவைகளுக்கும் தெரிவு.

தமிழுக்கும் சம உரிமை.

முதலியவற்றிற்குஅரசாங்கம் நிரந்தரத் தீர்வு காண முடியாதென இச்சபைகருதுவதால் சென்ற பொதுத் தேர்தலில் வடகிழக்குத் தமிழ் மக்களால் அதிக வாக்குகளினுல் கொடுபட்ட ஆணையைஅங்கீகரித்து தமிழ் மக்களின் இழந்த தமிழ் ஈழத்தை மீளத்தருமாறும், இதற்கு ஏற்றதாக எமது தமிழ்த் தலைவர்களுடன் சமாதானப் பேச்சு வார்த்தை மூலம் இதனை அங்கீகரிக்குமாறும் இப்பொதுச் சபை கோருகின்றது"

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கத்தின் பதினேழாவது ஆண்டுப் பொதுக்கூட்டம் 4-9-78 திங்கட்கிழமை காலை 9 மணியளவில் சங்கத் தலைவர் திரு.கு. டே. செல்வராசா அவர்களின் தலைமையில் இடம்பெற்றபோது மேற்படி தீர்மானம் ஏகமனதாகநிறைவேற்றப்பட்டது.

தமிழ் ஈழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினையும், மற்றும் அதுபோன்ற இயக்கங்களையும் தடைசெய்கின்ற சட்டமூலத்தை மீளப்பெறுமாறு தர்மிஷ்ட ஆட்சியாளரைக் கோருவதெனவும் இன்னுமொருதீர்மானமும், மற்றும் பலதீர்மானங்களும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மேற்படிஆண்டுப்பொதுக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக்கூட்டணியின் கிளிநொச்சித்தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. வி. ஆனந்தசங்கரி அவர்களும் விசேட அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர்.

புதிய தலைவராக திரு. கு. டே. செல்வராசா, செயலாளராக திரு. செ. அருச்சுனு, அஞ்சல் ஒலி ஆசிரியராக திரு. வ. ஆ. தங்கவேலாயுதம் ஆகியோரும் மற்றும் பலர் முகாமைக் குழுவிலும் தெரிவு செய்யப்பட்டனர்.

## தந்தை செல்வா படத் திறப்பு விழா

தமிழ் ஈழத்தின் தேசிய பிதா, தந்தை செல்வாவின் திருவுருவப்படமொன்றினை வல்வை சனசமூக சேவா நிலயத்தில் திரு.எஸ். ஞானமூர்த்தி(சமாதானநீதவான்) அவர்கள் 18.8.78 வெள்ளிக்கிழமையன்று திறந்து வைத்தார்கள்.

வல்வை சனசமூக சேவா நிலயம் திருத்த வேலைகளுக்குப்பின் புதிய அமைப்பில் வாசகர்களுக்கென வெள்ளி இரவு 8 மணியளவில் நிலயத்தலைவர் திரு, வ. ஆ. அதிருபசிங்கம் அவர்களினுல் திறந்துவைக்கப்பட்டது. இவ்வைபவத்தின் இரண்டாம் அங்கமாக தந்தை செல்வாவின் திருவுருவப் படமும் மேற்படி நிலயத்தினுள் திரைநீக்கம் செய்து திறந்துவைக்கப்பட்டது. திரு. எஸ். ஞானமூர்த்தி அவர்கள் தமிழர் கூட்டணியின் ஒற்றுமைக்கு வித்திட்டவர்களில் ஒருவர் என்பதும், வல்வையிலேயே தமிழர் கூட்டணி ஆரம்பித்து வைக்கப்பட்டதென்பதும் குறிப்பிடத்தக்கது.

## இன்றைய தலைவர்களுக்கு வரோதயரே வழிகாட்டி

### யாழ்ப்பாணத்தில் அமரருக்கு அஞ்சலி

"அடக்கம், பொறுமை தியாகம், எளிமை, தூய்மை கொள்கைப்பிடிப்பு, சாதாரண மக்களுடன் இரண்டறக் கலந்து பழகும்தன்மை, போன்ற பல்வேறு குணுதிசயங்கள் கொண்டவராகஅமரர் இராசவரோதயம்விளங்கினர். தந்தை செல்வா ஒருவரையே தலைவராக ஏற்று விடுதலை இயக்கத்தில் இறுதிவரை பணிபுரிந்தார். திருமலைஒளி அமரர் வரோதயர் இன்றைய இயக்கத்தலைவர்களுக்கெல்லாம் ஒரு வழிகாட்டியாக— ஆதர்ஸபுருஷராக—விளங்குகிருர்!"

இவ்வாறு யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டணித் தலைமைச் செயலகத்தில் 2-9-78 சனிக்கிழமை மாலை நடைபெற்ற திருமலையின் அணையாவிளக்கு அமரர் இராசவரோதயம் நினைவுக்கூட்டத்தில் உரையாற்றிய சுதந்திரன் ஆசிரியர் திரு. கோவை மகேசன் குறிப்பிட்டார்.

டாக்டர் எஸ்.ஏ. தர்மலிங்கம் இவ்விழாவுக்குத் தலைமைதாங்கிப் பேசுகையில் தானும் வரோதயரும் ஒன்ருகப்படித்தவர்கள் என்றும், படிக்கும்போதே ஒழுக்கசீலராகவும், உண்மை நிறைந்தவராகவும் விளங்கிய திரு. இராசவரோதயம் பின்னுல் அரசியலிலும் ஈடுபட்டு அதே பண்புகளை கடைப்பிடித்தாரென்றும் குறிப்பிட்டார்.

சுதந்திரன் ஆசிரியர் மேலும் பேசுகையில் கூறியதாவது:—

"1952ம் ஆண்டு கோப்பாயிலிருந்து வந்தவன்னியசிங்கமும் திருமலையிலிருந்து புறப்பட்ட அமரர் வரோதயருமே தமிழர்விடுதலைஇயக்கத்தின் ஆரம்பகால வளர்ச்சிக்கு அடிப்படையாகஅமைந்து வடக்கையும், கிழக்கையும் இணைத்தவர்கள். தீண்டாமை யொழிப்புக்கு 1957ம் ஆண்டே பாராளுமன்றத்தில் சட்டம் கொண்டுவந்தவர் அமரர்வரோதயர். இன்றைய தீண்டாமையொழிப்புச்சட்டத்தின்மூலவர் அமரர் வரோதயரேயாகும்."

திரு. ஈழவேந்தன் பேசுகையில்— "திருகோணமலையை காப்பாற்றிய பெருமையும், திருகோணமலையை காப்பாற்றியேதீர வேண்டுமென்ற உணர்வையூட்டிய பெருமையும் அமரர் வரோதயருக்கே உண்டு. திருமலையைச் சேர்ந்தஅவர், யாழ் மண்ணிலேயே இறந்தார், அவரது பூதவுடம்பு யாழ் மக்களின் அஞ்சலிக்குப் பின்னரே திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதுஇந்தமுறையில் சாவிலும், வடக்கு, கிழக்கு ஒற்றுமையை உறுதிப்படுத்தியவர் வரோதயர்" என்ருர்.

## எண்ணம் வெல்லும்

*மாத்தளை—இராஜலிங்கம்*

கீழ்காடு மேல்காடு வெட்டிக் கொத்தி
வைரமிகு பாலையினை தறித்து சாய்த்து
ஈனமுடன் பிளிறி வரும் மத யானை தன்னை
வீரமுடன் எதிர்த்து நின்று வெள்ளாமை செய்ய
மாமலையாம் மலைநாட்டு மண்ணை விட்டு
மாமன்னர் நாம் வந்தோம் வடக்கு இங்கே!

நிமிர்ந்த மலை முகடெங்கும் சிகரம் தட்டி
செழிப்பு மிகுத் தேயிலையின் தளிர் பறிக்கும்
எம்மவர்க்கு இனிமேலும் சிங்களவன்
இங்கிழைக்கும் பெருங்கொடுமை அவைகட்கோர்
எல்லையிட்டு வெல்லுதற்காய் எண்ணங் கொண்டே
எழுந்து வந்தோம் மலையைவிட்டு வடக்கு இங்கே

வடக்கென்றும் கிழக்கென்றும் பேதம்பேசி
மாமலையாம் மலைநாட்டார் மாற்ருர் என்று
இங்குரைத்தோம் இதுவரைக்கும் போதும் போதும்
வடக்கினையும் கிழக்கினையும் இணைத்து வைத்து
மாமலையாம் மலைநாட்டை அதனுள் சேர்த்தே
கண்டிடுவோம் தமிழீழம் எண்ணம் வெல்லும்!

சாதியென்று சச்சரவு நமக்குள் போட்டு
சஞ்சலமே பல்லாண்டாய் பட்டோம் போதும்
கவ்வாத்து வெட்டுகின்ற கருப்பையாவும்
வலைவீசி மீன் சேர்க்கும் சம்மாட்டியும்
தமிழரன்ருேர் சளைக்காது நாமிணைந்தால்
தானுக வந்து விடும் தமிழன் ஈழம்

## மந்திரிக்கு மாலை சூட்டுவது கூட்டணியின் கொள்கை அல்ல!

நிருபர்:— விடுதலைநாடி நிற்கும் தமிழ்த்தலைவர்களில் ஓரிருவர் ஆளும்கட்சித் தலைவர்களை கட்டியணைத்து மாலை அணிவிக்கின்றனரே. இதுஇளைஞர்களுக்குவேதனை அளிப்பதாக அமைந்துள்ளது. இது குறித்து நடவடிக்கையெடுக்கக் கூடாதா?

அமிர்:— (சிரித்துக் கொண்டே) ஜனுதிபதிக்கோ அமைச்சருக்கோ மாலையிடுவதோ, வரவேற்பளிப்பதோ எமது கொள்கை அல்ல; அவர்கள் பங்குகொள்ளும் உத்தியோக பூர்வமான நிகழ்ச்சிகளில் மாத்திரம் கலந்துகொள்வதற்கு பாராளுமன்ற நடவடிக்கைக் குழு அனுமதி வழங்கியுள்ளது. ஆனுல் இதற்குமாருக ஏதாவது நடைபெற்றிருந்தால், அதையொட்டிய சூழ் நிலை [illegible]

—வீரகேசரி 26-8-78

## அஞ்சல் ஒலி ஆசிரியர் தெரிவு

அஞ்சல் எழுதுவினைஞர் சங்கஏடான 'அஞ்சல் ஒலி'யின் ஆசிரியராக திரு. வ. ஆ. தங்கவேலாயுதம்' 4.9.78 திங்கட்கிழமை கிளிநொச்சி நகரமண்டபத்தில் இடம்பெற்றமேற்படி சங்கத்தின் ஆண்டுப் பொதுக் கூட்டத்தின் போது ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார். வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகக் கொண்டஇவர் தமிழர் விடுதலைக்கூட்டணியின் உறுப்பினருமாவார்.

இவர் மட்டுநகரில்கடமையாற்றிய போது தமிழர்விடுதலைக் கூட்டணியின் இயக்க நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்கேற்று அதனுல் பல தடவைகளில் ஆட்சியாளரின் அடிவருடிகளினுல் பலமாகத் தாக்கப்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறுகதை எழுத்தாளரான இவரது பல சிறுகதைகள் 'சுடர்' உட்பட ஈழத்தின் பல வெளியீடுகளில் பிரசுரமாகி உள்ளது.

சிறுகதைத்துறையால்மட்டுமன்றி நாடக உலகிலும் இவர் பிரபல்யம் வாய்ந்தவராவார். கொழும்பு, மட்டக்களப்பு, யாழ்ப்பாணப் பிரதேசங்களில் பலவெற்றி நாடகங்களை மேடையேற்றியுள்ளார்.

'தமிழ்ஈழ விடுதலைக்காக' என்ற பெயரைக் கொண்டு சிறுகதைத் தொகுப்பொன்றினை விரைவில் வெளியிடுவதற்கான முயற்சியில் இவர் ஈடுபட்டுள்ளார்.

## 'மில்க்வைற் செய்தி இதழ் - 33'

1. 9 மில்க்வைற் நீல சோப் அல்லது 2பார் சோப் அல்லது
2. நீம் சோப் அல்லது 2மெடிக்கேட்டற் சோப் அல்லது
2. சவ்வைப்பவுடர் மேலுறைகளை அனுப்பி மேற்படி மில்க்வைற் செய்தியை பெற்றுக்கொள்ளுங்கள்.

மில்க்வைற் — யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காசி, சேனாதி கைதானதைத் தொடர்ந்து

# மட்டுநகரில் பூரண ஹர்த்தால்!

மட்டக்களப்பில் அரசியலமைப்பு பகிஷ்கரிப்பு நடவடிக்கையிலீடுபட்டிருந்த மட்டக்களப்பு கூட்டணிக் கிளையின் செயலாளரும் கூட்டணியின் மத்தியசெயற்குழு உறுப்பினருமான கவிஞர் காசி ஆனந்தனும், தமிழ் இளைஞர் பேரவை அமைப்புச் செயலாளர் மாவை சேனாதிராசாவும் மற்றும் இளைஞர்களும் பொலிசாரினால் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பு மக்கள் தாமாகவே முன்வந்து அரசியல மைப்பு எதிர்ப்புஹர்த்தாலைவெற்றிகரமாக நடத்தினர். கடைகள் வர்த்தக நிலையங்கள் யாவும் மூடப்பட்டு, கறுப்புக் கொடிகள் பறக்க விடப்பட்டதுடன், பாடசாலை மாணவர்கள் முழுமையாகப் பகிஷ்கரிப்பிலீடுபட்டனர். மட்டக்களப்பில் அண்மைக் கால வரலாறு காணாத அளவுக்கு போராட்ட உணர்வும் எழுச்சியும், ஏற்பட்டுள்ளது.

மட்டக்களப்பில் அரசியலமைப்பு எதிர்ப்பு இயக்கத்தை கவிஞர் காசி ஆனந்தனும், மாவை சேனாதிராஜாவும் முன்னின்று நடத்தினர். இவர்கள் இருவரும், தமிழர் விடுதலைக் கூட்டணியினாலும் தமிழ் இளைஞர் பேரவையினாலும் வெளியிடப்பட்ட துண்டுப்பிரசுரங்களை பொது மக்களிடையே 6.9.78 புதன்று விநியோகித்தனர். அப்போது இவர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

காசி ஆனந்தன், மாவை சேனாதிராசா ஆகியோருடன் கைது செய்யப்பட்டு 15-9-78வரை விளக்கமறியலில் வைக்கப்பட்ட ஏனைய இளைஞர்களின் பெயர் விபரம் வருமாறு:—

வை. பூபாலபிள்ளை எஸ். லோகேஸ்வரன், சி. எஸ். பென்ஜமின், வி. ராம்ராஜ், சு. ஜேசுராசா, ஜே. சாந்தகுமார், ச. காந்தரூபன், சி. மரியசூசை, மட்டக்களப்பு த.இ.பேரவை செயலாளர் பொன் வேணுதாஸ்.

காசி, சேனாதி, வேணுதாஸ், ஆகிய இளைஞர் தலைவர்களும் இளைஞர்களும் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து மட்டக்களப்பில் எதிர்ப்பு இயக்கம் மேலும் விறுவிறுப்பும் வேகமுமடைந்தது. கடைகளை யடைக்கும்படி கூட்டணி கேட்டிராத போதிலும், தமிழ், முஸ்லீம் வர்த்தகர்கள் தாமாகவே முன்வந்து கடைகளைப் பூட்டி பூரண ஹர்த்தால்அனுட்டித்தனர். மட்டக்களப்பு மாநகரம் வெறிச்சோடியது. பாடசாலை மாணவர்கள் பகிஷ்கரிப்பில் நூறு வீதம் ஈடுபட்டனர்.

## கொண்டாட்டங்கள் பகிஷ்கரிப்பு!

மிகவும்பரபரப்பும் கொந்தளிப்பும் நிலவிய சூழ்நிலையில் மட்டக்களப்புபொலிஸ் நிலையத்துக்கு அருகிலுள்ள தனியார் வளவொன்றில் தமிழ் ஈழத்தேசிய கீதம் முழங்க, சுமார் 300க்கு மேற்பட்ட இளைஞர்கள் உணர்ச்சியுடன் சூழ்ந்து நிற்க தமிழீழத் தேசியக் கொடியை மட்டக்களப்பு தொகுதிக் கிளையின் துணைச் செயலாளர் திரு. பி. யோசெப் ஏற்றி வைத்தார். இந்நிகழ்ச்சியில் மட்டக்களப்பு த. இ. பே தலைவர் திரு. இரா. தவராஜாவும் கலந்து கொண்டார்.

### போகம்பரை விளக்கமறியலில் மாவை, காசி

விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ள கவிஞர் காசி ஆனந்தனும் மாவைசேனாதிராசாவும் கண்டி போகம்பரை சிறைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

8-9-78 வெள்ளிக்கிழமை மட்டக்களப்பு வெபர் அரங்கில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கலை நிகழ்ச்சிகளை மட்டக்களப்பு பொது மக்கள் முற்றாகப்பகிஷ்கரித்தனர். 'பாண்ட்' வாத்திய நிகழ்ச்சியில்சிங்கள மாணவிகள் மட்டுமே கலந்துகொண்டனர். தமிழ் மாணவமாணவிகள் இவற்றை முற்றாகப் பகிஷ்கரித்தனர். சிங்கள அரசாங்க உத்தியோகத்தர்களும், அவர்களது குடும்பத்தினருமே இதில் பங்கு பற்றினர். பொலிசாரும் இராணுவத்தினருமே பார்வையாளராகப் பங்கு கொண்டிருக்கக் காணப்பட்டனர். தன்மானமுள்ள மட்டக்களப்பு தமிழ் மக்கள் அந்த நிகழ்ச்சிகளை முற்றாகப் பகிஷ்கரித்து அரசின் முகத்தில் கரிபூசினர். மட்டக்களப்பு மீண்டும் களத்திலிறங்கி விட்டது என்பதை அரசியலமைப்பு பகிஷ்கரிப்பு நிகழ்ச்சிகள் எடுத்துக் காட்டின. கிழக்கு மாகாணம் தமிழ் ஈழத்தை ஏற்கவில்லையென்று கூறும் தேவநாயகத்துக்கு மட்டக்களப்பில் மூண்டுள்ள விடுதலை உணர்ச்சி சரியான பதிலாக அமைந்துள்ளது.

### திருகோணமலை

திருகோணமலையிலும் தமிழ்ப்பாடசாலைகள் முற்றாகப்பகிஷ்கரிக்கப்பட்டன. அரசியலமைப்புக் கொண்டாட்டங்களைப்பகிஷ்கரிக்குமாறுகோரும் சுலோகங்கள் திருகோணமலை நகர்முழுவதும் எழுதப்பட்டிருக்கக் காணப்பட்டன. இது சம்பந்தமாக யோகராசா என்ற இளைஞர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு 11-9-78 வரை விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை பா. உ. திரு. இரா. சம்பந்தன் தமது இல்லத்தில் தமிழீழத்தேசியக் கொடியை தேசிய கீதத்துடன் ஏற்றிவைத்தார்.

திருகோணமலையிலுள்ள பிரதான பாடசாலையொன்றில் ஏற்றிவைக்கப்பட்டிருந்த சிறிலங்கா தேசியக்கொடி நீயிடப்பட்டது.

### வவுனியாவில்

வவுனியாத்தொகுதியில் பண்டாரிக்குளத்திலும்சேமமடுவிலும், நெடுங்கேணியிலும் தமிழீழக் கொடிகளை வவுனியா பா.உ. திரு. தா. சிவசிதம்பரம் ஏற்றி வைத்தார். பாடசாலை பகிஷ்கரிப்பும் வெற்றிகரமாக நடைபெற்றது.

---

—1-ம் பக்கத் தொடர்

கங்களை முன்னின்று கண்காணித்தனர்.

### பாடசாலை பகிஷ்கரிப்பு நூறு வீதம் வெற்றி

செப்டம்பர்7 — சிங்கள ஏகாதிபத்திய அரசியலமைப்பு எதிர்ப்புஇயக்கத்தின் போது, பாடசாலைப் பகிஷ்கரிப்புஇயக்கம் நூற்றுக்கு நூறுவீதம் வெற்றி பெற்றது. தன்மானமும் தமிழ்மானமும் நிறைந்த தமிழ் மாணவ மாணவியர் பாடசாலைகளை முற்றாகப் பகிஷ்கரித்தனர். செப்டம்பர் 7ல் பாடசாலைகளுக்கு மாணவர்கள்அத்தனைபேரும் வரவேண்டுமென்றும் சிங்கள சிறீலங்காவின் தேசியக்கொடியையேற்றி "நமோ நமோ மாதா" என்றசிங்கள நாட்டுத்தேசிய கீதத்தைப் பாடவேண்டுமென்றும் கல்வியமைச்சு போட்டிருந்த கட்டாய உத்தரவு, மாணவர்கள் பாடசாலைகளைப் பகிஷ்கரித்ததன் காரணமாகப் பிசுபிசுத்தது. தேசியக்கொடியேற்றவோ, தேசியகீதம் பாடவோ தமிழ்பாடசாலைகளில் ஆளே கிடைக்கவில்லை.

யாழ்ப்பாண நகரிலுள்ள வேம்படி, இந்துக்கல்லூரி, கொன்வெண்ட், சுண்டிக்குளி மகளிர் கல்லூரி, மத்தியகல்லூரி, சென்ஜோன்ஸ் கல்லூரி, இந்துமகளிர்கல்லூரி போன்ற பிரபலகல்லூரிகள் உட்பட,குடாநாட்டின் சகலபகுதிகளிலுமுள்ள பாடசாலைகள் மாணவமாணவியர்பகிஷ்கரிப்பினால் மூடப்பட்டுக் கிடந்தது. சாதாரணமாகக் கலகலவென காணப்படும் பாடசாலைகள் அழுதுவடிந்தன. இப்பகிஷ்கரிப்பில் முஸ்லிம் மாணவர்களும் கலந்து கொண்டனர். முஸ்லிம்வட்டாரத்திலுள்ள உஸ்மானியாகல்லூரிக்கும் பெரும்பாலான மாணவர்கள் செல்லவில்லை.

யாழ் அரசாங்க செயலகத்தில் நடைபெற்ற அரசியலமைப்பு கொண்டாட்டங்களுக்கு 'பாண்ட்' வாசிப்பதற்கு தமிழ் மாணவிகள் மறுத்து விட்டதால், 'பாண்ட்' இன்றியே வெறும் சம்பிரதாயச் சடங்காக அந்நிகழ்ச்சிஅமைந்தது. யாழ்ப்பாணத்தில் புதிய அரசியலமைப்பு நடைமுறைக்கு வருவதையொட்டி வேறு எந்தக் கொண்டாட்டமும் இடம்பெறவில்லை.

யாழ்ப்பாணத்திலுள்ள வர்த்தகர்கள் தங்கள் கடைகளைப் பூட்டி பூரண ஹர்த்தால் நடத்துவதற்கு தாயாராக முன்வந்தபோதிலும் கடைகளைப்பூட்டும்படி கூட்டணி கோராததால் யாழ்ப்பாணத்தில் கடையடைப்பு இடம் பெறவில்லை.

### செயலகத்தில் கொடியேற்றம்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைச் செயலகத்தில் 7-9-78 வியாழன் காலை10 மணிக்கு தமிழீழத் தேசியகீதம்முழங்க, தமிழ் ஈழத் தேசியக்கொடியான உதய சூரியன் கொடியை கூட்டணியின் தலைவர் செந்தமிழ்க்காவலர் சிவசிதம்பரம் அவர்களும் யாழ் பா.உ. திரு. வெ. யோகேஸ்வரன் அவர்களும் ஏற்றிவைத்தனர். இதற்கு முன் தலைவர் சிவாவும், ஏனையோரும் தமிழீழத்தந்தை மூதறிஞர் செல்வாவின் படத்துக்கு அஞ்சலிசெலுத்தினர். துப்பாக்கி ஏந்திய பொலீசார் தூரத்தே நின்று இதைக்கவனித்துக் கொண்டிருந்தனர்.

கொடியை ஏற்றிவைத்து தலைவர் சிவா பேசுகையில் "இன்றுஏற்றப்பட்டிருக்கும் இந்தக்கொடி தமிழ் ஈழத்தின் சுதந்திரத்தைக் காணுமட்டும் இறங்காதென்றும், தமிழினத்தின் சுதந்திர உணர்வுக்கு விரோதமாககொழும்பில் நடைபெறும் அரசியலமைப்புக் கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட தமிழ்க்கலைஞர்களைத் தமிழ் மக்கள் ஒற்றுமையாக பகிஷ்கரித்து ஒதுக்க வேண்டுமென்றும், சென்ற ஆண்டு தமிழ்மக்கள் அடிஉதைப்பட்டு கற்பழிக்கப்பட்டு அகதிகளாக ஓடிவந்த அவலக்காட்சி கண்ணைவிட்டுமறையுமுன்பே இங்கிருந்து சிங்கள ஏகாதிபத்தியத்துக்குபந்தம் தூக்கிக்கொண்டு சிலர்ஓடமுற்பட்டது வெட்கக்கேடான சம்பவமென்றும் எடுத்துரைத்தார்.

யாழ் பா.உ. திரு. வெ. யோகேஸ்வரன் பேசுகையில், தமிழ் ஈழத்தின் தேசியக் கொடியை தமிழ்மக்கள் உயிரையும் கொடுத்துக்காக்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். இந்நிகழ்ச்சியில் திருவாளர்கள் ஈழவேந்தன், குணரத்தினம், திருமதி வேலுப்பிள்ளை, மௌலவி மீரான் பிச்சை ஆகியோரும் உரையாற்றினர்.

### நல்லூரில்...!

தமிழ்ஈழத்தின் கடைசித் தமிழ் மன்னன் சங்கிலியன் ஆண்ட ராசதானியான நல்லூரில், திருநெல்வேலி சிவன் கோவிலுக்கு அருகில் நல்லூர் பா.உ.வும்,கூட்டணித் தலைவருமான சிவா அவர்கள் தமிழ் தேசியக் கொடியை ஏற்றிவைத்தார். இந்நிகழ்ச்சியில் திருவாளர்கள் வண்ணை ஆனந்தன் க. முருகரத்தினம், சி. நாகராசா, சட்டத்தரணி இ. விசுவநாதன், ஆ. துரைராசசிங்கம், ஆகியோர்ரும் பங்கு பற்றினர்.

இந்நிகழ்ச்சியின் போது, தலைவர் சிவா பேசுகையில் தம்மையும், வவுனியா சிவபவையும் தமிழ்காங்கிரசிலிருந்து வெளியேற்றிவிட்டதாக சில தான்தோன்றிகள் பத்திரிகைகளில் அறிக்கை விட்டபோதிலும், தமிழர் விடுதலைக் கூட்டணி எக்காரணம் கொண்டும் சிதையப் போவதில்லை. சிதைய விடவும்மாட்டோம் என்று குளுரைத்தார்.


## திருமண அழைப்பு

மணமகன்
திருநிறை செல்வன்
கனகசபை
**பத்மநாதன்**

மணமகள்
திருநிறை செல்வி
கந்தையா
**பாலகௌரி**

காலம்: ஆவணித்திங்கள் 30ம்நாள் (15-9-78) வெள்ளிக்கிழமை
நேரம்: காலை 8.30க்கும்—10.45க்கும் இடையே வரும் சுபவேளை
இடம்: பிடாரி அம்பாள் ஆலயம் கொக்குவில் (மேற்கு)

உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(தனிப்பட்ட அழைப்பு இல்லை)

வி. கனகசபை குடும்பத்தினர் (நகை அடைவு பிடிப்பவர்கள்) கொக்குவில் மேற்கு, கொக்குவில்

வித்துவான் கந்தையா குடும்பத்தினர் கொக்குவில் மேற்கு, கொக்குவில்


இப்பத்திரிகை சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் யாழ்ப்பாணம் மகாத்மாகாந்தி வீதி 15ம் இலக்கத்திலுள்ள சுதந்திரன் அச்சகத்தில் 1978ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13ம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org